DEREK PRINCE
MINISTRIES - INDIA

நம்பிக்கை

- Part Five

நம்பிக்கை சோதனையினால் வளர்ச்சியடைகிறது

என் வாழ்நாட்களில், தங்கள் வாழ்வில் பல்வேறு சவால்களை சந்தித்துக் கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்களுக்காக ஜெபிக்கும் சிலாக்கியத்தை நான் பெற்றிருக்கிறேன். ஒவ்வொரு நபருக்கும் இருக்கும் பிரச்சனைகள் வெவ்வேறாக இருந்தாலும், உலகளாவிய ஒரு பொது பிரச்சனை உண்டு. நம் அனைவருடைய வாழ்விலும், ஏதோ ஒரு காலக்கட்டத்தில் நாம் நம்பிக்கையின்மையை அனுபவிக்கின்றோம்.

கிறிஸ்தவர்களாக நாம் நம்பிக்கையின்மையை எதிர்கொள்ள வேண்டியதிருக்கலாம், ஆனால் நாம் அதற்கு பலியாக வேண்டிய அவசியம் இல்லை. வேதத்தில் முன் வைக்கப்பட்டிருக்கும் உண்மையான நம்பிக்கை, வாழ்க்கையை குறித்த நமது கண்ணோட்டத்தை மாற்ற கூடியதாக உள்ளது. ஆனால் காலங்கள் போல் பழைமையான இப்போராட்டத்தில் தோல்வியடைகிறேன் என்று நாம் எண்ணும் போது, நாம் என்ன செய்கிறோம்? அது தான் "நம்பிக்கை" என்ற இத்தொடரின் முடிவு பகுதியில் நம்முடைய விவாதத்தில் பொருளாய் இருக்க போகிறது. முன்பு வெளிவந்த பகுதிகளோடு, நம்பிக்கையைக் குறித்த இந்த ஐந்து பகுதி தொடரின் இக்கடைசி பகுதியும், நம்பிக்கை இன்னதென்றும் அது எவ்வளவு முக்கியம் என்பதையும் முக்கியமாக அதை உடையவர்களாய் இருப்பது எப்படி என்பதையும் நீங்கள் அறிந்துக்கொள்ள செய்யும் என நம்புகிறேன்.

மகிமையின் நம்பிக்கை

நம்முடைய இந்த தொடரில், நம்பிக்கையை குறித்த எட்டு அத்தியாவசியமான சத்தியங்களை நாம் கண்டடைந்துள்ளோம். இப்பாடத்தில் நாம் விவாதிக்க இருக்கும் பொருளுக்கு அவைகளின் ஓர் சாராம்சம் மிகவும் நல்ல அடிப்படையை ஏற்படுத்தும் :

முதலாவது, கிறிஸ்தவ வாழ்வில் மூன்று நிலையான உண்மைகள் உள்ளன: விசுவாசம், நம்பிக்கை மற்றும் அன்பு.

இரண்டாவதாக, நம்பிக்கை புதிய பிறப்பினால் உண்டாகிறது, அப்போது நாம் ஒரு ஜீவனுள்ள நம்பிக்கையினுள் மறு பிறப்பு அடைகிறோம்.

மூன்றாவதாக, கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததே நம்பிக்கையின் அடிப்படையாக இருக்கிறது.

நான்காவதாக, நம்பிக்கை கிறிஸ்துவின் வருகையை எதிர்நோக்குகிறது - அதை வேதம் ஆனந்த பாக்கியம் என்று அழைக்கின்றது.

ஐந்தாவதாக, தேவனுடைய அன்பே நம்பிக்கையின் ஊற்றாய் இருக்கிறது.

ஆறாவதாக, வேதாகம நம்பிக்கை பரிசுத்த வாழ்விற்கு ஊக்குவிக்கிறது.

ஏழாவதாக, இத்தகைய நம்பிக்கை உறுதியான கிறிஸ்தவர்களை உருவாக்குகிறது.

எட்டாவதாக, நம்முடைய நம்பிக்கை, நம்முடைய இரட்சிப்பின் அத்தியாவசியமான பகுதியாக இருக்கிறது. இது பின்வரும் வார்த்தைகளை சார்ந்தது: கிறிஸ்து உங்களில் இருப்பதே அந்த மகிமையின் நம்பிக்கை.

The Teaching Legacy of
DEREK PRINCE

Derek Prince Ministries - India
www.derekprince.in
Issue #019

இரண்டு முக்கிய அடுத்தனைகள்

எனது முந்தைய கடிதத்தில் நாம் ஒரு முக்கிய வேறுபாட்டை விவாதித்தோம். அதை மறுபடியும் கூற விரும்புகிறேன்: நம்பிக்கை உள்ளவர்களுக்கும், நம்பிக்கை இல்லாதவர்களுக்கும் இருக்கும் வேறுபாடு. கொலோ 1:27ல் ஆதிகாலங்களுக்கும் தலைமுறை தலைமுறைகளுக்கும் மறைவாயிருந்து, இப்பொழுது தேவனுடைய ஜனங்களுக்கு வெளியாக்கப்பட்ட இரகசியத்தை குறித்து பவுல் பேசுகிறார். அதை இந்த சுருக்கமான வார்த்தைகளில் அவர் அடக்குகிறார்: "கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே..." ஆகவே கிறிஸ்து உங்களில் இருக்கும் போது, மகிமையின் நம்பிக்கை உங்களிடத்தில் உண்டு. நம்பிக்கையை குறித்த நம்முடைய புரிதலுக்கு, இந்த எளிய சத்தியம் அத்தியாவசியமானதாக இருக்கிறது.

> *"கிறிஸ்து உங்களில் இருக்கும் போது, மகிமையின் நம்பிக்கை உங்களிடத்தில் உண்டு. நம்பிக்கை குறித்த நம்முடைய புரிதலுக்கு, இந்த எளிய சத்தியம் அத்தியாவசியமானதாக இருக்கிறது."*

கிறிஸ்து இல்லாமல் இருப்பவர்களை குறித்து என்ன? எபேசியர் 2:12ல் பவுல், "அக்காலத்திலே இயேசுகிறிஸ்துவைச் சேராதவர்களும், ...நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர்களென்று நினைத்துக் கொள்ளுங்கள்" என்று கூறுகிறார். ஆகவே நம்மெல்லாருக்கும் இரண்டு அடுத்தனைகள் தான் உண்டு: கிறிஸ்து நம்மில் இருந்தால், நமக்கு கிறிஸ்துவோடு நித்திய ஜீவன் என்கிற மகிமையின் நம்பிக்கை இருக்கின்றது. ஆனால், நாம் கிறிஸ்துவற்றது இருப்போமானால், நாம் நம்பிக்கை இல்லாமலும் தேவனற்றவர்களாகவும் இருக்கிறோம்.

இக்கருத்தை நீங்கள் சிந்திக்கும் போது, நீங்கள் முதல் பிரிவில் இருக்கிறவர்களாக பார்த்துக் கொள்ளுங்கள் என்று உங்களுக்கு ஆலோசனை சொல்லுகிறேன். கிறிஸ்து உங்களில் இருக்கிறாரா? மகிமையின் நம்பிக்கையை உடையவர்களாக இருப்பதென்றால் என்ன என்பதை அறிந்திருக்கிறீர்களா?

உபத்திரவங்களில் மேன்மை பாராட்டுதல்

இந்த தொடருக்கான அறிமுக உறையில் நம்பிக்கையின் தீவிரமான தேவை இருந்த என் வாழ்வில் ஒரு காலக் கட்டத்தை குறித்த என் தனிப்பட்ட அனுபவத்தை நான் பகிர்ந்துக்கொண்டேன். இறுதியாக, பரிசுத்த ஆவியான வர் என்னை நேரடியாக வேதத்திற்கு கொண்டு சென்று, அங்கு எனது தேவையை சந்தித்தார். அந்த அனுபவத்தினால், நம்பிக்கையை குறித்த வேதாகம புரிதல் கிறிஸ்தவர்களுக்கு உண்டாக வேண்டும் என்ற ஆழ்ந்த அக்கறை எனக்குண்டு - முக்கியமாக அவர்கள் போராடிக்கொண்டிருக்கும் போது, நம்முடைய நம்பிக்கை சோதிக்கப்படும் போது, என்ன நடக்கிறது? அந்த கேள்விக்கு பதில் கூற, முதலாவது ரோமர் 5:1-5ஐ கவனிப்போம்:

> *"இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்ப பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம். அவர் மூலமாய் நாம் இந்தக் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினால் பெற்று நிலைகொண்டிருந்து, தேவமகிமையை அடைவோமென்கிற நம்பிக்கையினாலே மேன்மைபாராட்டுகிறோம்."*

தேவ மகிமையை அடைவோம் என்ற நம்பிக்கையில் மேன்மை பாராட்டுகிறோம் என்று பவுல் கூறுகிறார். மேன்மைபாராட்டல் என்ற வார்த்தைக்கு, களிக்கூறுதல், உறுதியாய் இருத்தல் என்ற அர்த்தம் உண்டு. மேன்மை பராட்டும் அளவிற்கு, நம்பிக்கை தான் களிக்கூறுதலையும் உறுதியையும் கொண்டு வருகிறதென்பதை கவனியுங்கள். ஆனார் பவுல் அத்தோடு நிறுத்துவதில்லை. அடுத்த வசனத்தில் அவர் தொடர்ந்து:

> *அதுமாத்திரமல்ல, உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து, உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம்.*

இவ்வசனத்தில், முன் சொன்ன வசனத்திற்கு முற்றிலும் மாறான ஒன்றை பவுல் கூறுகிறார். நம்பிக்கையில் மேன்மை பாராட்டுவதை நாம் புரிந்துக்கொள்ள முடியும், ஆனால் போராட்டங்களில், உபத்திரவங்களில் சோதனைகளில் மேன்மை பாராட்டுவதை நாம் எப்படி புரிந்துக்கொள்வது? ஒருவேளை அதை குறித்து நீங்கள் இதுவதை சிந்தியாமல் இருந்திருக்கலாம், உபத்திரவங்களுக்கு நீங்கள் எப்படி பதில் அளிக்கிறீர்கள்? அவைகளில் மேன்மை பாராட்டுகிறீர்களா?

நாம் ஏன் நம்முடைய உபத்திரவங்களில் மேன்மை பாராட்ட வேண்டும்?

> *உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம். மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது.*

இவ்வசனங்களில், நம்பிக்கைக்கு நேராக நம்மை நடத்தும் ஒரு தொடர்நிகழ்வுக்கு பவுல் நம்மை கூட்டி காண்பிக்கிறார். நாம் போராட்டங்களினுள் வரும்போது, விசுவாசத்தை பற்றிக்கொண்டால் அது நம்பிக்கையையும் பற்றிக்கொள்ள முடியும். உபத்திரவம் நமக்காக என்ன செய்கிறது? கிறிஸ்தவ நற்பண்புகள் கட்டப்படுவதற்கு அவசியமான ஒரு செயல்தொடரை அது நமக்குள் தூண்டிவிடுகிறது - நமக்கு ஒரு திடமான, பலமான, உறுதியான நம்பிக்கையை கொடுக்கும்படி

உண்மையானதென்று விளங்கவும், உறுதியாக்கப்படவும், நம்பிக்கை உபத்திரவத்தினால் சோதிக்கப்படுவது அவசியம். அந்த செயல்தொடரை கவனியுங்கள்:

Address Change

Important!!! ***Important!!!*** ***Important!!!***

Our address has changed. New Address: DEREK PRINCE MINISTRIES - INDIA, A40, Anna Nagar Main Road, Sivapragasam Salai, Trichy - 620 017.

உபத்திரவம் பொறுமையை உண்டாக்குகிறது; பொறுமை பரீட்சிக்கப்பட்ட நற்குணத்தை பிறப்பிக்கிறது, பரீட்சிக்கப்பட்ட நற்குணம், நம்மை வெட்கப்படுத்தாத ஒரு நம்பிக்கையை பிறப்பிக்கிறது.

உபத்திரவம் என்னத்தை பிறப்பிக்கிறது

பொறுமையை குறித்து நான் உங்களுக்கு ஒன்றை சொல்லட்டும். பொறுமைக்கான திறவுக்கோலை அறிந்திருக்கிறீர்களா? அது பொறுமையாய் இருப்பது தான், பொறுமையாய் இருப்பதை தவிற பொறுமையை கற்றுக்கொள்ள வேறு வழியில்லை. அது நீச்சலை போன்றது. நீச்சலை குறித்த எல்லா தத்துவத்தையும் எல்லா நகர்வுகளையும், கை அசைவுகளையும், அதற்கு சுவாசிப்பதை குறித்த எல்லா உண்மைகளையும் நீங்கள் அறிந்திருக்கலாம். ஆனால் இறுதியாக நீந்த கற்றுக்கொள்வதற்கு ஒரே வழி நீந்துவது தான். பொறுமையை கற்றுக்கொள்ள ஒரே வழி, பொறுமையாய் இருப்பது தான்.

ஆகவே, நாம் உபத்திரவத்தினுள் வரும்போது, இந்த முக்கியமான உண்மைகளை பற்றிக்கொள்வது அவசியம்: நாம் எதிர்கொண்டுள்ள போராட்டம் நம்முடைய நன்மைக்கு தான். அது நமக்கு உதவும். இதை கடந்து போக தேவனே அனுமதித்துள்ளார், ஏனெனில் அந்த உறுதியான, பலமான பிரகாரசமான அசைக்க முடியாத நம்பிக்கையை நமக்குள் பிறப்பிக்க இது ஒன்றே வழியாகும். உபத்திரவம் பொறுமையை உண்டாக்குகிறது.

பொறுமை எதை உறுவாக்குகிறது? பரீட்சிக்கப்பட்ட நற்குணத்தை அது உருவாக்குகிறது. உபத்திரவத்தின் வழியாய் கடந்து, வெற்றியோடு வெளி வருகிற நபர், பரீட்சிக்கப்பட்ட நற்குணத்தை உடையவராக இருக்கிறார். “நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோம்" என்று பவுல் கூறுகிறார் (ரோமர் 8:37). “முற்றிலும் ஜெயம் கொள்ளுபவர்கள்" என்றால் என்ன? என்னுடைய புரிதல் இது தான்: போராட்டத்திற்குள் நீங்கள் செல்லும் போது உங்களிடம் இருந்தவைகளை விட, அதை விட்டு வெளியே வரும் போது, அதிகம் பெற்றிருக்கிறீர்கள். ஜெயிக்கிறவராக, உங்களுடையதை மாத்திரம் நீங்கள் உடையவராக இருப்பதில்லை, ஒரு வெற்றியையும் கூட பெற்றுள்ளீர்கள். உபத்திரவத்தில் நாம் பொறுமையாய் இருக்கும் போது அப்படி தான் இருக்கிறது - நாம் பரீட்சிக்கப்பட்ட நற்குணத்தோடு வெளியே வருகிறோம்.

பரீட்சிக்கப்பட்ட நற்குணம் அவசியமானது ஏனெனில் அது நம்முடைய நம்பிக்கையை நிலைநாட்டுகிறது. இது ஆரம்பமாகும் முன்னமே, நமக்குள் தேவ மகிமையை அடைவோம் என்ற நம்பிக்கை இருந்தது. ஆனால் அதை விட்டு வெளியே வரும் போது, முற்றிலும் வேறுபட்ட அளவில் நம்மிடம் நம்பிக்கை இருக்கிறது. இந்த சோதிக்கப்பட்ட, பரீட்சிக்கப்பட்ட நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்துவதில்லை, மாறாக தேவனுடைய அன்பின் முழுமையை அறிந்துகொள்ள நம்மை அது திறக்கின்றது.

தேவனுடைய அன்பின் முழுமையை பெற, பரீட்சிக்கப்பட்ட நற்குணம் தேவை. உறுதி தேவை உங்களினுள் தேவன் ஊற்ற விரும்பும் எல்லா அன்பையும் பெறத்தக்க பலமான பெரிய பாத்திரம் உண்டாயிருக்க வேண்டும்.

நம்பிக்கையின் வாசல்

இந்த செயல்தொடரை பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் எழுதின ஒரு பகுதியிலிருந்து நான் விவரித்து காண்பின்ன விரும்புகிறேன். ஓசியா 2ம் அதிகாரத்தில், தங்களோடு எப்படி இடைப்பட போகிறார் என்பதை தேவன் இஸ்ரவேலுக்கு அறிவிக்கிறார்; அவர்களை ஒரு உபத்திரவ காலத்திற்குள் கொண்டு வருவதை குறித்து பேசுகிறார். ஆனால் அதன்பின் அவர் கூறுகிறது:

> *அவ்விடத்திலிருந்து அவளுக்கு அவளுடைய திராட்சத்தோட்டங்களையும், நம்பிக்கையின் வாசலாக ஆகோரின் பள்ளத்தாக்கையும் கொடுப்பேன்.*
>
> *ஓசியா 2:15*

ஆகோர் என்றால் “பிரச்சனை" என்பதை அறிந்திருப்பது அவசியம். ஆகவே ஆண்டவர், “இஸ்ரவேலை பிரச்சனைக்குள் அனுமதித்து, அந்த பிரச்சனையினுள் கிரியை செய்து, அதையே நம்பிக்கையின் வாசலாக மாற்றுவேன்" என்று கூறுகிறார். இது ஒரு அதிசயமான வேத கோட்பாடு தேவன் நம்மை எப்போதெல்லாம் பிரச்சனைக்குள் கொண்டு வருகிறாரோ, எப்போதுமே அதை விட்டு வெளியேறும் ஒரு வழியும் உண்டென்று நினைவில் கொள்ளுங்கள் - ஒரு வெளிவழி உண்டு, அது நம்பிக்கையின் வாசல்.

> *“தேவன் நம்மை எப்போதெல்லாம் பிரச்சனைக்குள் கொண்டு வருகிறாரோ, எப்போதுமே அதைவிட்டு வெளியேறும் ஒரு வழியும் உண்டென்று நினைவில் கொள்ளுங்கள் - ஒரு வெளிவழி உண்டு, அது நம்பிக்கையின் வாசல்.”*

உங்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட செய்திமடல் வருமானால் இமெயில் முகவரி **secretary@derekprince.in** *அல்லது அலைபேசி* **9585538202** *தொடர்புகொண்டு எந்த பெயரில், விலாசத்தில் பல செய்தி மடல்கள் வருகிறது என்பதை தெரியப்படுத்தவும்.*

உங்கள் கவனத்திற்கு!!!

உங்கள் விலாசம் மாறும் பொழுது தயவு எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

இன்னும் தேவையா?

- ○ ஆம், இந்த இலவச இதழில் எனக்கு இன்னும்--பிரதிகள் தேவை.
- ○ தயவு செய்து அடுத்த முறை எனக்கு கூடுதல் பிரதிகள் அனுப்பவும்.
- ○ முதல் முறையாக பெறுகிறேன், இனி தொடர்ந்து எனக்கு அனுப்பவும்.

See over for address details...

பதிவு செய்க!

- ○ தயவுசெய்து டெரிக் பிரின்ஸ் - இந்தியா ஊழியங்ளைப் பற்றிய ஊழியத் தகவல்களையும், புதிய புத்தகம் / சி.டி விவரங்களையும் எனக்கு அனுப்பி வைக்கவும்.
- ○ ஈமெயில் மூலமாக அனுப்பவும்.
- ○ கடிதம் மூலமாக அனுப்பவும்.

ISSUE #020

இரண்டு நிபந்தனைகள்

நாம் ஆலோசித்துக் கொண்டிருக்கும் இப்படிப்பட்ட பலமான, உறுதியான நம்பிக்கையை வளர்ப்பதற்கு, சுருக்கமாக மேலும் இரண்டு நிபந்தனைகளை நான் விளக்க விரும்புகிறேன். முதலாவது நிபந்தனை, வேதம் என்ன கூறுகிறதென்பதற்கு நம்முடைய கவனத்தை நாம் செலுத்த வேண்டும். இதை பவுல் ரோமர் 15:4ல் கூறுகிறார்:

தேவவசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும் படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது. (பவுல் வேத வாக்கியங்களை குறித்து பேசுகிறார். எல்லா வசனங்களும் நமக்கு போதிக்கும் படியாக தான் எழுதப்பட்டிருக்கின்றன).

இப்படிப்பட்ட நம்பிக்கையை வளர்ப்பதற்கு பொறுமை தேவை என்பதை நாம் ஏற்கெனவே சுட்டி காண்பித்துள்ளோம். ஆனால் வேதாகமத்தின் உற்சாகமும் நமக்கு தேவை என்று பவுல் கூறுகிறார். நீங்கள் போராட்டத்தில், கடுமையான சூழல்களை சந்திக்கும் போது, வேத வாக்கியங்களின் பக்கம் திரும்புங்கள். அவைகளை வாசியுங்கள்! அவைகளை நம்புங்கள்! அவைகள் உங்களை உற்சாகப்படுத்தும்; உங்கள் நம்பிக்கையை பெலப்படுத்தும். தேவனால் கொடுக்கப்பட்ட இந்த நம்பிக்கையின் ஊற்றை தவிர்க்காதீர்கள்-அது தான் வேதம்.

“பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையினால் மட்டுமே நம்பிக்கை தன் முழுமையில் நம்மிடம் வரும்.”

சில நேரங்களில் வேதத்தை வாசிக்க விருப்பம் இல்லாது போன்று தோன்றாலம், ஆனால் உங்கள் மனதில் தீர்மானித்துக் கொள்ளுங்கள். “தேவனுடைய சத்தத்தை கேட்டு, என்னுடைய நம்பிக்கை பெலப்பட்டு, பொறுமையோடு தொடர கிருபையை பெற்றுக்கொள்ள செய்யும் ஏதோ ஒன்றை நான் வேதத்திலிருந்து பெறும் வரை, அதை நான் வாசிக்க போகிறேன்" என்று உங்களுக்கே சொல்லிக்கொள்ளுங்கள். அதற்காக தான் வேதம் எழுதப்பட்டது - நம்மை போதிக்க - அதன் வழியாய் நான் நம்பிக்கையை பெற.

பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால்

இது இரண்டாவது நிபந்தனை: நம்பிக்கை தன் நிறைவில், பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையால் மட்டுமே நம்மிடம் வரும். ரோமர் 15ம் அதிகாரத்தில் பவுல் இந்த அழகான வார்த்தைகளை நமக்கு கூறுகிறார்:

பரிசுத்த ஆவியின் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு, நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் உங்களை நிரப்புவாராக. (விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்தோஷம் மற்றும் சமாதானத்தினாலும் நிரப்பப்படுவது என்றால் என்ன என்பதை சிந்தித்து பாருங்கள்). ரோமர் 15:13

நாம் நம்பிக்கையில் பெருகுகிறவர்களாய் இருக்கும்படி, தேவன் நம்மை எல்லா சந்தோஷத்தினாலும், சமாதானத்தினாலும் நிரப்ப விரும்புகிறார். அப்படியானால் நமக்காக மட்டும் நம்பிக்கை கொண்டவர்களாக இருப்பது அல்ல, மாறாக மற்றவர்களுக்கு ஊழியம் செய்ய நம்பிக்கையுள்ளவர்களாக இருப்பது தான். மற்றவர்கள் சோர்ந்துபோய் இருக்கும் போது, அவர்களுக்கு நாம் ஒரு நம்பிக்கையின் வார்த்தையை கொடுக்கிறோம், உற்சாகப்படுத்தும் வார்த்தையை கொடுக்கிறோம். ஆனால் அது பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் உண்டாகிறதென்று கவனியுங்கள். இதை நாமாக செய்ய முடியாது. இப்படிப்பட்ட வெற்றியுள்ள நம்பிக்கையை பரிசுத்த ஆவியானவர் ஒருவரே வழங்கக்கூடும்.

நம்பிக்கையின் தேவன்

இந்த தொடரை ரோமர் 15:13ன் அழகான வார்த்தையோடு நான் நிறைவுக்கு கொண்டு வர விரும்புகிறேன்: நம்பிக்கையின் தேவன் ...உங்களை நிரப்புவாராக. அவர் நம்பிக்கையின் தேவன். நம்பிக்கையில்லாமல் நீங்கள் தேவனை அறிய முடியாது. அவரே உண்மையான சகல நம்பிக்கையின் இறுதி காரணராயிருக்கிறார். நம்பிக்கையின் தேவன் உங்களை நிரப்புவாராக. இதுவே உங்களுக்கான என்னுடைய ஊக்கமான ஜெபம்.

“அவர் நம்பிக்கையின் தேவன். நம்பிக்கையில்லாமல் நீங்கள் தேவனை அறிய முடியாது.”

இந்த வசனத்தை இன்று நமது வாழ்க்கையின் மீது அறிக்கை செய்வோம்:

பரிசுத்த ஆவியின் பலத்தினாலே நம்பிக்கை பெருகும்படிக்கு, நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும் சமாதானத்திலும் என்னை நிரப்புவாராக.

இவ்வார்த்தைகளை நிச்சியுங்கள். அவைகளை தியானியுங்கள். ஒரு போராட்டமான சூழலில் அல்லது பிரச்சனைகளை சந்திக்கும் போது, அவைகளுக்கு திரும்புங்கள். உங்கள் வாழ்விலும் அனுபவத்திலும் அவைகள் முற்றிலும் உண்மையாகும் வரை, மறுபடியும், மறுபடியும் அறிக்கை செய்யுங்கள்.

உங்கள் விபரம்

NAME: MR / MRS / MISS ....

ADDRESS: ....

....

CITY: .... POSTCODE: ....

EMAIL: ....

இந்த இதழ் முற்றிலும் இலவசமானது. ஆனால் செலவுகளை சந்திக்க நீங்கள் உதவலாம்.

நன்கொடை: ₹

Derek Prince
Ministries - India

Contact us
www.derekprince.in
admin@derekprince.in
Ph : 9585538205
A40, ANNA NAGAR
MAIN ROAD,
SIVAPRAGASAM
SALAI, Trichy - 620017